வனங்கள், நியதிச்சபைகள் போன்ற.) 55,000க்கு மேற்பட்ட தொகையால் அதிகரிப்பதற்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. இவ்வாண்டில் அதன் முகாமையின் கீழ்கொண்டுவரப்பட்ட பெருந்தோட்ட நிலப்பரப்பு விகிதாசார அடிப்படையில் ஒப்புநோக்குகையில் ஊழியர்களின் அதிகரிப்பு எண்ணிக்கையை விட அதிகமானதாகும். எனவே 55,000 பேரைக்கொண்ட இவ்வதிகரிப்பு எனத் தோன்றியபோதும் தனியார்துறையில் இருந்து அரசுசார் துறைக்கு ஊழியர்கள் மாறிச்சென்றமையையே இது காட்டுகின்றது.

புதிய அமைப்பு வடிவங்களூடாக தொழில் வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் தொழிலாளர் எண்ணிக்கையைக் கூட்டி உற்பத்தியைப் பெருக்கும் வழிமுறைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுப்பண்ணைகள் சிறப்பாக மக்கள் குடியிருப்புக்களும் (ஜனவாச) மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் செயற்றிட்டங்களுமே இவ்வகையில் முதன்மையானவையாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைகள் 1976 செத்தெம்பர் இறுதியில் 20,457 பேர்களுக்கு வேலைவாய்ப்பளித்ததுடன் அவற்றில் மேலதிக வேலைகளின் எண்ணிக்கை, 1976இன் முதல் 9 மாதங்களில் 10,658 ஆக இருந்தது. 1976 இறுதியில் மக்கள் குடியிருப்புக்கள் (ஜனவாச) 20,000 பேருக்கு வேலைவாய்ப்பளித்ததுடன் இவ்வாண்டுக் காலப்பகுதியில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை ஏறக்குறைய 2,000 ஆல் அதிகரித்தது.

தனியார்துறையில் வேலைவாய்ப்புக்கள் பற்றிய போதிய தரவுகள் இல்லாத நிலையில், நிறுவன அமைப்புடைய தனியார்துறையில் வேலைவாய்ப்பிலேற்பட்ட ஆண்டுக்குரிய மாற்றங்களை அளவிடுவதற்காக ஊழியர்சேமநிதியில் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை கணிப்பிற்கு எடுக்கப்பட்டன. பெருந்தோட்டத்துறையில் 20,980 கணக்குகள் வீழ்ச்சியுற்றதினாலும் பெருந்தோட்டத்துறை அல்லாத துறையில் 6,703 கணக்குகள் அதிகரித்தமையினாலும் 1976இல் இக்கணக்குகளின் எண்ணிக்கை 14,277 ஆக அல்லது 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெருந்தோட்டங்களின் வேலைவாய்ப்பிலேற்பட்ட வீழ்ச்சிக்கு இந்தியத்தொழிலாளர்கள் மீள அனுப்பப்பட்டதே காரணமாகும். வேலைநாட்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன்வாயிலாக தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியேறுவதால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன. பெருந்தோட்டத்துறையின் தொழில் நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தவிர்ப்பின் அரசதுறை, மக்கள் குடியிருப்புக்கள் (ஜனவாச) மாவட்ட அபிவிருத்திச் சபைகள், ஒழுங்காக அமைக்கப்பெற்ற தனியார்துறை ஆகியவற்றின் புதிய தொழில்நிலை ஏறக்குறைய 40,000 ஆக இருக்கும். எனினும் இவ் எண்தொகை நிறுவனமற்ற தனியார் துறையினுலும், உள்நாட்டு வேளாண்மைத் துறையினுலும் ஏற்படுத்தப்பட்ட தொழில் நிலையையும் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தினுல் உருவாக்கப்பட்ட தொழில் நிலையையும் உள்ளடக்கமாட்டாது.

## வெளிநாட்டு வர்த்தகமும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு வர்த்தகம்

1966 தொடங்கி இலங்கையின் வர்த்தக நிலுவை தொடர்ந்து குறைந்து விளங்கி 1974, 75இலும் முறையே ரூ. 10,820 இலட்சமாகவும் ரூ. 13,180 இலட்சமாகவும் மிக உயர்மட்டக் குறையைப் பதிவுசெய்தது. சுங்கத்தரவின் அடிப்படையில் பார்க்கையில் இப்போக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். காரணம், 1976இல் ரூ 1,270 இலட்சம்கொண்ட மிகையை

வர்த்தக நிலுவை பதிவுசெய்தது. எனினும், வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் நேரடியாக ஈடுபட்டுள்ள அரச முகவர் நிலையங்களின் தரவின் அடிப்படையில்[1] பார்க்குமிடத்து சீராக்கம் செய்யப்பட்ட வர்த்தக நிலுவை ரூ. 1,050 இலட்சம்கொண்ட குறையைக் காட்டுகிறது. இந்த இரண்டு வகை எண்தொகைகளின் வேறுபாடுகள் அட்டவணை 7இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 7

வர்த்தக நிலுவை 1976

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|
| சுங்கத் தரவுகள் ... | 4815 | 4688 | + 127 |
| மத்திய வங்கியினல் சீராக்கப்பட்ட தரவுகள் ... | 4840 | 4945 | — 105 |

சுங்கத்தரவின் அடிப்படையிலேயே 1976இல் வர்த்தகத்தில் ஏற்பட்ட போக்குகள் இங்கு ஆராயப்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளின் வர்த்தக நிலுவையின் முக்கிய தரவினையும் செய்யப்பட்ட வர்த்தகத்தின் அளவினையும் விலைக்குறிகாட்டிகளையும், வர்த்தக மாற்றுவிகிதத்தினையும் அட்டவணை 8 தருகின்றது. ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினலும், இறக்குமதிச் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சியினலுமே 1976இன் வர்த்தக நிலுவையில் முன்னேற்றம் பெறப்பட்டது. 1975இன் வருவாய்களிலும்பார்க்க ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 8,820 இலட்சத்தால் அல்லது 22 சதவீதத்தால் அதிகரித்திருக்கும்போது, இறக்குமதிச்செலவு ரூ. 5,630 இலட்சத்தால் அல்லது 11 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

வர்த்தக மாற்றுவிகிதத்தில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டதன் விளைவாகவே இறக்குமதிச் செலவில் குறைப்பும், ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பும் காணப்பட்டது. 1962க்குப் பின்பு முதன்முறையாக வர்த்தக மாற்றுவிகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிப்போக்கு மாற்றப்பட்டுள்ளது. வர்த்தக மாற்றுவிகிதக் குறிகாட்டி (1967ஆம் ஆண்டின் அடிப்படையில் 100) 1975இல் 46ஆக இருந்து 1976இல் 62 ஆக முன்னேறியுள்ளது. ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பும் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுமே வர்த்தக மாற்றுவிகிதம் முன்னேறுவதற்கு வகைசெய்தது. ஏற்றுமதி விலைக்குறிகாட்டியின் அதிகரிப்பு 20 சதவீதமாகும்.

விலைக்காரணிகளில் ஏற்பட்ட சார்பான போக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி அளவில் ஏற்பட்ட சார்பற்ற போக்கை எதிரீடுசெய்தன. 1976இல் எல்லா ஏற்றுமதிகளின் அளவுக்குறிகாட்டி 1975 உடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. அதேவேளையில் எல்லா இறக்குமதிகளின் அளவுக்குறிகாட்டி 9 சதவீதத்தால் அதிகரித்தது. எனவே ஏற்றுமதி அளவில் குறைப்பும் இறக்குமதியின் அளவில் அதிகரிப்பும் ஏற்பட்ட நிலையிலும் வர்த்தக மாற்று

1, இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுமதியையும், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நப்தா ஏற்றுமதியையும், உணவு ஆணையாளரின் சீனி, தானிய இறக்குமதிகளினதும் தரவை இது உள்ளடக்குகின்றது.

## அட்டவணை 8

## வெளிநாட்டு வர்த்தகம் 1967 – 1976

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | குறிகாட்டி எண் (1967 = 100) | | | | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலை | | |
| | ஏற்றுமதிகள்* (க. எ. பெ) | இறக்குமதிகள் (கொ. கா. க) | வர்த்தக நிலுவை | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | |
| 1967 | 1,690 | 1,738 | — 48 | 100 | 100 | 100 | 100 | 1 0 |
| 1968 | 2,035 | 2,173 | — 138 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 1,916 | 2,543 | — 627 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 2,033 | 2,313 | — 280 | 102 | 102 | 118 | 140 | 84 |
| 1971 | 1,947 | 1,986 | — 39 | 99 | 90 | 117 | 150 | 78 |
| 1972 | 2,009 | 2,064 | — 55 | 97 | 88 | 118 | 157 | 75 |
| 1973 | 2,617 | 2,715 | — 98 | 98 | 79 | 137 | 209 | 65 |
| 1974 | 3,471 | 4,554 | — 1,082 | 85 | 56 | 213 | 370 | 58 |
| 1975 | 3,933 | 5,251 | — 1,318 | 102 | 69 | 199 | 433 | 46 |
| 1976 | 4,815 | 4,688 | + 127 | 97 | 75 | 239 | 383 | 62 |

* மீள ஏற்றுமதிகளையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

விகிதத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் வர்த்தக மிகையை ஏற்படுத்தியது; எனினும் இங்கு கவனிக்கவேண்டியது யாதெனில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வர்த்தக மாற்றுவிகிதத்தின் வீழ்ச்சி 1976இல் மாற்றப்பட்டபோதும், 1967ஆம் அடிப்படையாண்டுடன் ஒப்பிடுகையில் சார்பற்றதாக விளங்கியது.

முக்கிய ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஏற்றுமதி விலைகளின் முன்னேற்றத்தினுல் நாடு பெறத்தக்க முழு நன்மையைத் தடுத்துள்ளது. 1975உடன் ஒப்பிடுகையில் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 130 இலட்சம் கிலோகிறும்களினுல் அல்லது 6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஆனுல் 1976இல் ஏற்பட்ட 21,000 இலட்சம்கொண்ட ஏற்றுமதி வருவாய்கள், 1975இல் பெற்ற தொகையிலும்பார்க்க 1680 இலட்சத்தால் அல்லது 8.7 சதவீதத்தால் அதிகரித்தன, இவ்வதிகரிப்புக்கு விலைகளில் ஏற்பட்ட 15.6 சதவீத அதிகரிப்பே காரணமாகும். இதேபோல் 1976இல் இறப்பரின் ஏற்றுமதி அளவு 240 இலட்சம் கிலோகிறும்களால் அல்லது 15 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. எனினும் இவ்வாண்டில் இறப்பர் விலைகளில் ஏற்பட்ட 60 சதவீத பெரும் அதிகரிப்பின் காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 2,360 இலட்சத்தால் அல்லது 36 சதவீதத்தால் அதிகரித்தது.

தெங்கு ஏற்றுமதிகளைப் பொறுத்தவரை தேங்காயெண்ணெயின் விலை வீழ்ச்சியுற, ஏனைய தெங்கு ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரித்தன. ஏற்றுமதியளவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியேற்பட்டதன் காரணமாக ஏற்றுமதி வருவாய்கள் 140 இலட்சத்தால் அல்லது 3.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. மூன்று முக்கிய தெங்கு ஏற்றுமதிகளான கொப்பரு, தேங்காயெண்ணெய், தேங்காய்த்துருவல் ஆகியவற்றின் ஒரு காய்க்குச் சம்மான அளவு 8,458 இலட்சம் காய்களிலிருந்து 8,033 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. கொப்பரு ஏற்றுமதிகள் 1975இல் 14 இலட்சம் கிலோகிறும்களாக இருந்து 1976இல் 13 இலட்சம் கிலோகிறும்களாக வீழ்ச்சியுற்றவேளையில் தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகள் சென்ற ஆண்டின் 545 இலட்சம் கிலோகிறும்களிலிருந்து 606 இலட்ச கிலோகிறுமிற்கு அதிகரித்தது. தேங்காய்த்துருவலின் ஏற்றுமதி அளவில் ஒரு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்பட்டது. இது, 1975இன் 593 இலட்சம் கிலோகிறும்களிலிருந்து 1976இல் 460 இலட்சம் கிலோகிறும்களுக்கு வீழ்ச்சியுற்றது.

அண்மை ஆண்டுகளில் ஏற்றுமதிகளின் அமைப்பு ஓரளவு பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று முக்கிய வேளாண்மை ஏற்றுமதிகளில் நாடு தங்கியிருந்த தன்மை உள்நாட்டு ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதியில் 1975இல் 76 சதவீதத்திலிருந்து 76இல் 70 சதவீதத்துக்கு வீழ்ச்சியுற்றது, ஒப்பு நோக்குகையில் 1961, 66, 71 ஆகிய ஆண்டுகளில் இவை முறையே 90, 93, 90 சதவீதமாக விளங்கின. 1976இன் மொத்த ஏற்றுமதிகளில் அருங்கற்கள், அவைசார்ந்த கற்களும் 5.4 சதவீதத்துக்கு வகைகூறின. ஒப்புநோக்குகையில் 1975இல் இவை 4.6 சதவீதமாக விளங்கின. 1976இன் மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளில் 24.3 சதவீதத்துக்கு ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் வகைகூறின. ஒப்புநோக்குகையில் 1975இல் இவை 19.3 சதவீதமாக விளங்கின. கடந்த 5 ஆண்டுகளுக்குரிய ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் அட்டவணை 9இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 9

# ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் 1972 - 1976

| பண்டம் | | பெறுமதி – பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீதமும் மொத்த ஏற்றுமதிகளும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
| 1. தேயிலை | ... | 1,162 | 1,261 | 1,360 | 1,932 | 2,100 | 57.8 | 48.2 | 39.2 | 49.1 | 43.6 |
| 2. இறப்பர் | ... | 265 | 592 | 738 | 654 | 830 | 13.2 | 22.6 | 21.3 | 16.6 | 18.5 |
| 3. தெங்கு உற்பத்திகள் அவற்றில் | ... | 200 | 145 | 397 | 397 | 383 | 13.2 | 5.5 | 11.4 | 10.1 | 7.9 |
| 3.1 கொப்பரு | ... | 52 | 4 | 1 | 7 | 7 | 2.6 | 0.2 | ... | 0.2 | 0.1 |
| 3.2 தேங்காயெண்ணெய் | ... | 132 | 27 | 141 | 188 | 188 | 6.5 | 1.0 | 4 | 4.8 | 3.9 |
| 3.3 தேங்காய்த் துருவல் | ... | 78 | 111 | 252 | 193 | 180 | 3.9 | 4.2 | 7.3 | 4.4 | 3.7 |
| 3.4 உடன் காய்கள் | ... | 4 | 3 | 3 | 9 | 8 | 0.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 |
| 4. அரும் கற்களும் அவை சார்ந்த கற்களும் | ... | 12 | 141 | 109 | 180 | 261 | 0.6 | 5.4 | 3.1 | 4.6 | 5.4 |
| 5. ஏனைய உள்ளூர் ஏற்றுமதிகள் | ... | 218 | 346 | 843 | 760 | 1,167 | 10.9 | 13.2 | 24.3 | 19.3 | 24.2 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் * | ... | 1,993 | 2,596 | 3,447 | 3,923 | 4,801 | 99.2 | 99.2 | 99.3 | 99.7 | 99.7 |
| மீள-ஏற்றுமதிகள் | ... | 16 | 21 | 25 | 10 | 14 | 0.8 | 0.8 | 0.7 | 0.3 | 0.3 |
| மொத்தம் | ... | 2,009 | 2,617 | 3,472 | 3,933 | 4,815 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

* மொத்தம் சேர்க்கப்படாதவிடங்களில் கப்பல் எரிபொருள் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளன.

தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகள் (1975இல் பொருளாதார மீளாய்வின் பின்னிணைப்பு அட்டவணை 57இல் இவ்வுள்ளடக்கத்தைப் பார்க்கவும்) 1975இல் 5,336 இலட்சமாக இருந்து ரூ. 2221 இலட்சம் அளவுக்கு அதிகரித்து 1976இல் ரூ. 7,557 இலட்சமாக விளங்கியது. இரசாயன உற்பத்திகள், சீமெந்து, பொறித்தொகுதி, இயந்திரக் கருவிகள் நீங்கலாக பல தயாரிப்பு ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குவகைகூறியது.எனினும், பெருமளவு இறக்குமதி மூலப்பொருட்களை உள்ளடக்கும் பெற்ரோலியத் தயாரிப்புக்கள் (நப்தா, எரிபொருளெண்ணெய், கப்பலெரிபொருள், வானூர்தி எரிபொருள்)தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் மூன்றில் இரண்டு பங்கை உள்ளடக்குவதோடு மொத்த ஏற்றுமதிகளில் 10.5 சதவீதத்தையும் கொண்டுள்ளது. இப்பெற்ரோலிய உற்பத்தி ஏற்றுமதிகள் 30 சதவீதத்தால் அதிகரித்தது. அத்துடன் சிறு வேளாண்மை ஏற்றுமதிகளில் பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் 90 சதவீதத்தால் அதிகரித்தது.

1975இல் இறக்குமதிக்கான செலவு ரூ. 5,630 இலட்சத்தால் வீழ்ந்தது. 1971ஆம் ஆண்டில் ரூ. 19,860 இலட்சமாகஇருந்த இறக்குமதிக்கான செலவினம் அவ்வாண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்து என்றுமில்லாதளவு 1975இல், ரூ.52,510 இலட்சங்களை அடைந்தது. இத்தகைய சூழ்நிலையில் இறக்குமதிச் செலவு குறைந்தமை மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதற்குக் காரணம் இறக்குமதி விலைகள் வீழ்ச்சியடைந்தமையாகும். எல்லா இறக்குமதிகளுக்கான விலைக் குறிகாட்டி 59 குறிகாட்டிப் புள்ளிகளால் மீண்டும் 1966ஆம் ஆண்டுக்குப் பின்பு 1975இன் 433 இலிருந்து 1976இல் 383ஆக வீழ்ச்சியுற்றது. எல்லா இறக்குமதிகளுக்குமான உயர்ந்த விலைகளின் போக்குகளுக்கு மாறுபடும் வகையில் இவ்வாண்டில்தான் முதன் முறை இப்போக்கு ஏற்பட்டது.

அட்டவணை 10

## பெரும் வகுப்புகளின்படி இறக்குமதிச் செலவு 1972 - 76

| விடயம் | பெறுமதி-பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | இறக்குமதிகளின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1972 | 1973 | 1974 | 1975 | 1676 |
| 1. நுகர்வுப் பண்டங்கள் ... | 1,069 | 1,424 | 2,138 | 2,651 | 1,732 | 51.8 | 52.5 | 47.0 | 50.5 | 36.9 |
| அ. உணவும் குடிபானமும் | 917 | 1,248 | 1,950 | 2,520 | 1,534 | 44.4 | 45.9 | 42.8 | 48.0 | 32.7 |
| ஆ. புடவைகள் (ஆடைகள் உட்பட) ... | 48 | 55 | 56 | 20 | 49 | 2.3 | 2.0 | 1.3 | 0.4 | 1.0 |
| இ. ஏனைய நுகர்வுப் பொருட்கள் ... | 104 | 120 | 129 | 111 | 149 | 5.0 | 4.4 | 2.8 | 2.1 | 3.2 |
| 2. இடைநிலைப்பொருட்கள் . | 502 | 815 | 1,920 | 1,888 | 2,256 | 24.3 | 30.0 | 42.1 | 36.0 | 48.2 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 438 | 452 | 457 | 653 | 643 | 21.2 | 16.6 | 10.0 | 12.4 | 13.7 |
| 4. 1, 2, 3இன் மொத்தம் ... | 2,009 | 2,690 | 4,515 | 5,192 | 4,634 | 97.3 | 99.1 | 99.1 | 98.9 | 98.8 |
| 5. பாகுபடுத்தப்படாத இறக்குமதிகள் .. | 55 | 25 | 39 | 59 | 54 | 2.7 | 0.9 | 0.9 | 1.1 | 1.2 |
| மொத்த இறக்குமதிகள்... | 2,094 | 2,715 | 4,554 | 5,251 | 4,688 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

இறக்குமதிச் செலவை, நுகர்வு, இடைநிலை, முதலீட்டுப்பொருள்கள் என மூன்று பெரும்வகுப்புகளின்படி அட்டவணை 10 தருகிறது. 1975ஆம் ஆண்டின் மொத்த இறக்குமதிப் பெறுமதியில் 50.5 சதவீதத்திற்கு வகைகூறிய நுகர்வுப் பொருட்கள் 1976இல் 36.9 சதவீதமாகப் பெருமளவில் வீழ்ச்சியடைந்தமையைக் காட்டுகிறது. 1975ஆம் ஆண்டிலிருந்தும் நுகர்வுப்பொருட்கள் இறக்குமதிக்கான பெறுமதி ரூ. 9,190 இலட்சங்களால் அல்லது 34.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது 1975இல் மொத்த இறக்குமதியில் 26.0 சதவீதமாக இருந்த இடைநிலைப்பொருட்கள் 1976ஆம் ஆண்டில், மொத்த இறக்குமதியில் 48.2 சதவீதமாக இருந்தது. இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிக்கான பெறுமதி ரூ. 3,710 இலட்சத்தால் அல்லது 19.7 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு மொத்த இறக்குமதியில் ஏறத்தாழ நான்கிலொரு பங்கிற்கும், இவ்வகை இறக்குமதிகளில் அரைப்பங்கிற்கு மேல் வகைகூறும் பெற்ரோலியத்தின் இறக்குமதிகளுக்கான விலை அதிகரித்தமை முக்கிய காரணமாகும். முதலீட்டு இறக்குமதிகளுக்கான பெறுமதி சிறிய அளவில் 1975இன் ரூ. 6,530 இலட்சத்திலிருந்து 1976இல் ரூ. 6,430 இலட்சமாக வீழ்ச்சியுற்றதெனினும் மொத்த இறக்குமதியில் இதன் தொடர்பான பங்கு 12.4 சதவீதத்திலிருந்து 13.7 சதவீதமாக அதிகரித்தது.

1976ஆம் ஆண்டில்முக்கிய பொருட்களான அரிசி, மா, சீனி பால் உற்பத்திப் பொருட்கள், வளமாக்கிகள், இரசாயனங்கள், மருந்துவகை உற்பத்திகள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தன. அரிசியின் இறக்குமதி அளவு 6.9 சதவீதத்தாலும், இறக்குமதி விலைகள் 19.2 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக அரிசிக்கான இறக்குமதிச் செலவில் 24.9 சதவீதங் கொண்டதொருவீழ்ச்சி ஏற்பட்டது. அதேபோல் மா, சீனி ஆகியவற்றின் இறக்குமதி அளவுகளும் விலைகளும் வீழ்ச்சியுற்றன மா இறக்குமதிகள் 1975இல் 16.5 சதவீதத்தால் 4,550 இலட்சம் தொன்களிலிருந்து 1976இல் 3,800 இலட்சம் தொன்களாகக் குறைந்தவேளையில், கொ க. விலை தொன் ஒன்றுக்கு 8.6 சதவீதத்தால் ரூ. 2,250 இலிருந்து ரூ 2,057உக்கு குறைவடைந்தது. இக்காரணிகள் 1976இல், மா இறக்குமதிகளின் பெறுமதியை ரூ. 2,430 இலட்சத்தால் அல்லது 24 சதவீதத்தால் வீழ்ச்சியடைவதற்கு ஏதுவாயிருந்தன.

சில ஆண்டுகளாக சீனியின் விலைகளில் புலப்பட்ட உயர்ந்த போக்கு 1976இல் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது. சீனிக்கான கொ. க. விலைகள் 36 சதவீதத்தால் 1975ஆம் ஆண்டின் ரூ. 4,370இலிருந்து 1976இல் ரூ. 2793 ஆக தொன் ஒன்றுக்கு வீழ்ச்சியுற்றது. இறக்குமதி செய்யப்பட்ட சீனியும் அளவும் 1975இல் 61,000 தொன்களிலிருந்து 1976இல் 45,000 தொன்களுக்கு வீழ்ந்தது. இவ்விரு காரணிகளின் விளைவாக சீனியின் இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 1,490 இலட்சத்தால் அல்லது 52 சதவீதத்தால் வீழ்ந்தது. அரிசி, மா, சீனி ஆகியவற்றின் இறக்குமதி மீதான உணவு ஆணையாளரின் தரவுகள் முன்பு கூறப்பட்ட குறிப்புரைகளின் அடிப்படையில் அட்டவணை 11இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 11

### அரிசி, மா, சீனி என்பவற்றின் அளவும், பெறுமதியும், விலையும்—இறக்குமதிகள்[1]

| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|---|
| **அரிசி** | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்கள் .. | 526 | 334 | 262 | 338 | 297 | 450 | 419 |
| பெறுமதி: பத்து இலட்சம் ரூபாய்கள் ... | 353 | 188 | 142 | 322 | 798 | 964 | 724 |
| கொ. க. விலை தொன்னொன்றுக்கு ரூபா ... | 671.15 | 563.11 | 544.25 | 953.18 | 2685.82 | 2141.32 | 1730.28 |
| **மா** | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்கள் ... | 369 | 330 | 324 | 365 | 442 | 455 | 380 |
| பெறுமதி: பத்து இலட்சம் ரூபாய்கள் ... | 225 | 212 | 218 | 458 | 938 | 1024 | 781 |
| கொ. க. விலை தொன்னொன்றுக்கு ரூபா .. | 611.44 | 630·79 | 667.26 | 1254.20 | 2124.04 | 2249.65 | 2056.68 |
| **சீனி** | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்கள் | 240 | 283 | 214 | 190 | 42 | 61 | 45 |
| பெறுமதி: பத்து இலட்சம் ரூபாய்கள் ... | 152 | 242 | 255 | 334 | 231 | 268 | 128 |
| கொ. க. விலை தொன்னொன்றுக்கு ரூபா | 633.71 | 844.65 | 1168.16 | 1752.16 | 5485.75 | 4370.24 | 2792.86 |
| மொத்தப் பெறுமதி: பத்து இலட்சம் ரூபாய்களில் . | 730 | 642 | 615 | 1114 | 1967 | 2256 | 1633 |

மூலம்: உணவு ஆணையாளர் திணைக்களம்.

1. இவ் அட்டவணை உணவு ஆணையாளரின் தரவுகளின் அடிப்படையில் அமைந்தது. சுங்கத்தின் தரவுகள் இவ் எண் தொகைகளிலிருந்து வேறுபடுகின்றன. இவை பொருளாதார மீளாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## சென்மதி நிலுவை

சென்மதி நிலுவைகளின் தரவுகள், ஆண்டின் உண்மை வருவாய்களாகவும் கொடுப்பனவுகளாகவும் விளங்குவதால் இப்புள்ளிவிபரங்கள் பண்டங்களின் அசைவுகளை எடுத்துக்காட்டும் வர்த்தகப் புள்ளிவிபரங்களுடன் வேறுபட்டுக் காணப்படுகின்றன. பொருட்களின் அசைவிற்கும் அவற்றின் கொடுப்பனவு அல்லது பணத்தின் பெறுகை ஆகியவற்றினிடையில் காலவேறுபாடுகளிருந்தபோதிலும் வெளிநாட்டு வர்த்தகத்தின் போக்குகளே சென்மதி நிலுவையின் செயலாற்றத்துக்கான உள்ளார்ந்த காரணங்களாக விளங்குகின்றன.

1976ஆம் ஆண்டுச் சென்மதி நிலுவையின் முக்கிய பண்பு யாதெனில் நடைமுறைக் கணக்குக்குறை 1974ஆம் ஆண்டின் ரூ. 9,070 இலட்சம், 1975ஆம் ஆண்டின் ரூ. 7,720 இலட்சம் ஆகிய தொகைகட்கு மாறாக ரூ. 498 இலட்சத்தினால் மட்டும் வீழ்ச்சியுற்றமையாகும். 1966ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து குறைவாகவே விளங்கிய சென்மதி நிலுவை 1976இல் ஆகக் குறைநிலையைப் பதிவுசெய்தது. அட்டவணை 12 கடந்த பத்து ஆண்டுக் காலத்தினது சென்மதி நிலுவை நிலையினைக் காட்டுகின்றது.

## அட்டவணை 12

# சென்மதி நிலுவை 1967—1976

பத்து இலட்சம் ரூபாய்களில்

| ஆண்டு | வர்த்தக நிலுவை | மாற்றல் கொடுப்பனவுகளுட்பட தேறிய புலனாகாதவைகள் | நடைமுறைக் கணக்கில் உள்ள நிலுவை | தேறிய நீண்ட தவணை மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|
| 1967 | — 335 | + 46 | — 289 | + 161 | — 128 |
| 1968 | — 380 | + 25 | — 355 | + 224 | — 131 |
| 1969 | — 746 | — 51 | — 797 | + 275 | — 522 |
| 1970 | — 315 | — 35 | — 350 | + 184 | — 166 |
| 1971 | — 287 | + 71 | — 216 | + 404 | + 188 |
| 1972 | — 255 | + 59 | — 196 | + 292 | + 96 |
| 1973 | — 299 | + 138 | — 161 | + 190 | + 29 |
| 1974 | —1263 | + 356 | — 907 | + 298 | — 609 |
| 1975 | —1421 | + 649 | — 772 | + 613 | — 159 |
| 1976* | — 709 | + 659 | — 50 | + 715 | + 665 |

*தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1975ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 1976ஆம் ஆண்டில் குறைந்த குறைநிலை ஏற்பட முக்கிய காரணம், ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 8,000 இலட்சத்தால் அதிகரித்தபோது இறக்குமதிக் கொடுப்பனவுகள் ரூ. 1,000 இலட்சத்திற்கும் குறைவாக அதிகரித்தமையாகும். இதன் விளைவாக, 1975இல் ரூ. 14,000 இலட்சமாகக் காணப்பட்ட வர்த்தகக் குறைநிலை, 1976இல் ஏறக்குறைய ரூ. 7,000 இலட்சமாகக் குறைவடைந்தது. குறிப்பாக வர்த்தக ஏற்றுமதிகள் ரூ. 47,073 இலட்சமாகக் காணப்பட்டவிடத்து, வர்த்தக இறக்குமதிகள் ரூ. 54,166 இலட்சமாகக் காணப்பட்டன இது, 1976இல் ரூ. 7,093 இலட்சம் கொண்ட வணிக அல்லது புலப்படும் வர்த்தகக் குறைநிலையை ஏற்படுத்தியது. தேறிய புலப்படாத கொடுக்கல் வாங்கல்களின் மிகையான ரூ. 1,122 இலட்சம்கொண்ட தொகை, பொருட்கள் பணிகள் கணக்கில் ரூ. 5,971 இலட்சம் கொண்ட குறைநிலையை ஏற்படுத்தியது மாற்றற் கொடுப்பனவுகளின் ரூ 5,473 இலட்சம்கொண்ட மிகை, பொருட்கள் பணிகள்கணக்கில் குறைநிலையை ரூ. 498 இலட்சத்துக்குக் குறைத்தது. வெளிநாட்டு அரசுகளிலிருந்தும், பன்னாட்டு முகவர்நிலையங்களிலிருந்தும் முழுமையாகப் பெறப்பட்ட நன்கொடைகளான ரூ. 4,916 இலட்சங்கொண்ட உத்தியோகப் பெறுகைகளே மாற்றல் கொடுப்பனவுகளின் முக்கிய உள்ளடக்கமாகும். அட்டவணை 13 நடைமுறைக் கணக்குமீதான 1976இன் சென்மதி நிலுவைகளின் சுருக்கத்தினைத் தருகின்றது.

## அட்டவணை 13

## நடைமுறைக் கணக்கின் மீதான சென்மதி நிலுவையின் 1976ஆம் ஆண்டிற்கான சுருக்கம்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | வரவுகள் | பற்றுக்கள் | தேறிய |
|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள்/புலப்படுவன ... | 4,707.3 | 5,416.6 | —709.3 |
| 2. பணிகள்/புலப்படாதன ... | 642.6 | 530.4 | +112.2 |
| வணிகப் பொருட்களினதும் பணிகளினதும் மொத்தம் ... | 5,349.9 | 5,947.0 | —597.1 |
| மாற்றல் கொடுப்பனவுகள் | | | |
| தனிப்பட்டவை .. | 109.0 | 53.3 | + 55.7 |
| அலுவல் சார்ந்தவை ... | 491.6 | — | +491.6 |
| மாற்றல் கொடுப்பனவுகளின் மொத்தம் ... | 600.6 | 53.3 | +547.3 |
| நடைமுறைக் கணக்கின் மொத்தம் ... | 5,950.5 | 6,000.3 | — 49.8 |

1976ஆம் ஆண்டின் நடைமுறைக் கணக்குமீதான சென்மதி நிலுவைகளின் போக்கு 1971 முதல் புலனாகும் கணக்குகளின் குறைநிலையையும், புலனாகா தனவற்றினது மாற்றற் கொடுப்பனவுகளின் மிகைகளையும்கொண்ட போக்கினை ஒத்திருந்தன. பின்னைய இரண்டு விடயங்களும் நடைமுறைக்கணக்குக் குறைநிலையினைக் குறைப்பதற்கு உதவின. 1964—68 காலப்பகுதியில் இதே மாதிரிப்போக்கு காணப்பட்டது.

மரபுவழியற்ற விடயங்களின் பண்ட ஏற்றுமதிகளின் அதிகரித்த வருவாய்களும், மரபுவழியான பொருட்களில், றப்பரின் வருவாயும் நடைமுறைக்கணக்கு மீதான சென்மதி நிலுவையின் முன்னேற்றத்துக்குரிய முக்கிய காரணிகளாக விளங்கின. முக்கிய மூன்று ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, றப்பர். தெங்கு என்பவற்றின் ஏற்றுமதி அளவுகளில் வீழ்ச்சி காணப்பட்டபோதும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக அவற்றின் மொத்த வருவாய்கள் அதிகரித்துக் காணப்பட்டன. தேயிலை தெங்கு என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அவற்றின் குறைந்த ஏற்றுமதி அளவை ஈடுசெய்தவிடத்து, ஆண்டின் பெரும் பகுதியில் சராசரியாக 50 சதவீதத்துக்குமேல் உயர்வடைந்து காணப்பட்ட இறப்பரின் விலைகள் மூன்று மரபுவழிப் பொருட்களின் மொத்த வருவாயின் அதிகரிப்புக்குக் காரணமாக விளங்கின. குறிப்பாக சிறு வேளாண்மை உற்பத்திப் பொருட்களும் பன்னாட்டு விலைகளில் இவற்றுக்கு ஏற்பட்ட உயர்ந்துவரும் போக்கினால் நலனடைந்தன.

எனினும், மரபுவழியற்ற துறையில் பெற்ற அதிகரித்த வருவாய்கள் 1976இல், மேலும் குறிப்பிடத்தக்க அளவில் காணப்பட்டன. 1974ஆம் ஆண்டின் 22 சதவீதத்தோடும் முன்னைய ஆண்டின் 24 சதவீதத்தோடும் ஒப்பிடுகையில், மொத்த ஏற்றுமதியில் இவற்றின் பங்கு 29.6 சதவீதமாக அதிகரித்தன. மரபுவழியற்ற ஏற்றுமதிப் பொருட்களில் இரத்தினக்கற்களும் அருங்கற்களும், தயாரிக்கப்பட்ட ஆடைகள், தகரத்திலடைக்கப்பட்ட பழ உற்பத்திகள், பெற்றோலிய தூய்மையாக்கலின் துணை உற்பத்திகளிலான நப்தாவும் அத்துடன் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கப்பல் எரிபொருள் தொழிற்பாடுகளும் இவற்றில் சிறப்பு இடத்தைப் பெறுகின்றன.

இறக்குமதிச்செலவு 1975ஆம் ஆண்டின் ரூ. 53,340 இலட்சத்திலிருந்து 1976 இல் ரூ. 54,170 இலட்சமாக 1.6 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இறக்குமதியினை இதேமட்டத்துக்குள் அடக்குவதற்கு இரண்டு காரணிகள் பொறுப்பாக விளங்கின. முதலாவதாக உணவுப்பொருள் இறக்குமதி தவிர்ந்த ஏனையவை தொடர்ந்தும் வெளிநாட்டுச் செலாவணி வரவுசெலவுத்திட்டத்துக்குட்பட்டு வலுப்படுத்தப்பட்டமை. இதன்படி, இறக்குமதிகள் வெளிநாட்டுச் செலாவணியின் முழுமையான ஒதுக்கீட்டுத் திட்டத்துக்கும் அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தன. இரண்டாவதாக, முக்கிய உணவு இறக்குமதிப் பொருட்களான அரிசி, கோதுமை மா, சீனி என்னும் பண்டங்களினதும், இடைநிலைப்பொருட்களின் வகைசார்ந்த வளமாக்கிகள் என்பனவற்றினதும் விலைக்குறைவு காரணமாக குறிப்பிடத்தக்க அளவு இறக்குமதிச்செலவு குறைக்கப்பட்டது.

ஆகக்கூடிய அதிகரித்த (மூலப்பொருள்) செலவுடைய இறக்குமதிப் பொருட்கள், மசகு எண்ணெயும், பெற்றோலிய துணை உற்பத்திகளுமேயாகும். இவைகள், 1976ஆம் ஆண்டில், அதற்கு முந்திய ஆண்டிலும் பார்க்கக் கூடிய அளவில் இறக்குமதி செய்யப்பட்டதும், எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி செய்யும் நாடுகள் ஒற்றேபர் 1975ஆம் ஆண்டில் பத்து சதவீதத்தால் மேற்கூறிய பொருட்களின் விலையை அதிகரித்ததும் ஓரளவு காரணமாகும்.

1976ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்களுக்குரிய முக்கிய புலப்படாத காரணிகளாக துறைமுக வருவாய்கள் ரூ 1,567 இலட்சமாகவும், சுற்றுலா வருவாயாக ஆகக்கூடிய தொகையைப் பதிவுசெய்த ரூ. 1,984 இலட்சமும் விளங்குகின்றன. அண்மை ஆண்டுகளில் சுற்றுலாத்துறை வருவாய்கள் மேல்நோக்கிய போக்கைக் காட்டியுள்ளன. இது, 1974இல் ரூ. 950 இலட்சமாயிருந்து, 1975இல் ரூ. 1,240 இலட்சமாக அதிகரித்து 1976இல் ரூ. 1984 இலட்சமாக ஏற்கனவே விளம்பியபடி விளங்கியது.

இதனால் ரூ. 498 இலட்சம்கொண்ட சிறிய நடைமுறைக்கணக்குக் குறைக்கு நிதியிடுவது முன்னைய ஆண்டைவிட இலகுவாயிருந்தது. மீளக்கொடுப்பனவுக்கு ரூ. 2,325 இலட்சத்தை ஒதுக்குகையில், நீண்டகாலக்கடன்கள் ரூ. 7,104 இலட்சத்துக்கு வழிவகுத்தன. ரூ. 9,429 இலட்சம்கொண்ட நீண்டகால உதவியின் மொத்த உட்பாய்ச்சல் ரூ 3,384 இலட்சம்கொண்ட பண்டஉதவியையும், ரூ 1,692 இலட்சம்கொண்ட உணவு உதவியையும், ரூ. 3,158 இலட்சம்கொண்ட செயற்றிட்ட உதவியையும், ரூ. 1,195 இலட்சம்கொண்ட ஏனைய உதவிகளையும் உள்ளடக்கியிருந்தது. இறுதியில் கூறப்பட்டுள்ள எஞ்சிய வகுப்பு ஐக்கிய அரபு எமிறேற்ஸ் இடமிருந்து பெற்ற ரூ. 930 இலட்சம் தொகைகொண்ட காசுக் கடனையும், சீன மக்கட் குடியரசில் இருந்து பெற்ற ரூ 270 இலட்ச காசுக்

கடன்களேயும் குறிப்பிடுகிறது. இந்த மட்டத்தில் கிடைத்த வெளிநாட்டு உதவி, நிரம்பலர்கள் காரணமாகவும் குறுங்காலக் கொடுகடன் காரணத்தாலும், நாடு அடைந்திருக்கும் கடன்பட்ட நிலேயை மேலும் கூட்டாதிருக்க உதவியது. உண்மையில் (ஓர் ஆண்டு இறுதியிலிருந்து மற்றைய ஆண்டு இறுதிவரை) நிரம்பலர் கொடுகடன்களேயும் உள்ளடக்கிய நாட்டின் குறுங்கால படுகடன்கள் ரூ. 914 இலட்சத்தினுல் குறைந்தன.

இத்துடன் பன்னுட்டு நாணய நிதியத்திலிருந்து சென்மதி நிலுவைக்குக் கிடைத்த மூலவளங்கள் ரூ 2,728 இலட்சமாகும். ஏற்றுமதித் தளம்பலுக்கு இழப்பு ஈட்டு நிதியிடல் திட்டத்தின்கீழ் ரூ. 1,580 இலட்சம் கிடைக்கத் தக்கதாக இருக்கையில், 1975ஆம் ஆண்டிற்கான எண்ணே வசதி முடிவின்கீழ் இலங்கைக்குரிய இறுதித் தொகையாக ரூ. 1,148 இலட்சம் வழங்கப்பட்டது. பழைய எடுப்பனவுகளின் பொருட்டு ரூ. 1,899 இலட்சம்கொண்ட பன்னுட்டு நாணய நிதியத்தின் மீளக்கொள்வனவுகள் செலுத்தப்பட்ட நிலேயில் சென்மதி நிலுவையினைத் தாங்க பன்னுட்டு நாணய நிதியமூலங்கள் வழங்கிய தேறிய தொகை ரூ. 867 இலட்சமாகும்.

முன்பு கூறியதற்கமைய பெறப்பட்ட பன்னுட்டு நாணய நிதிய மூலங்களும், கடன் கொடுக்கல் வாங்கல்களும், நாட்டில் நிலவிய குறையிலும் பார்க்கக் கணிசமானளவு எஞ்சியிருந்ததின் காரணமாக நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களே ரூ. 5,683 இலட்சத்தினுல் கட்டியெழுப்பத் துணே நின்றன. அத்துடன், வர்த்தகப் பங்காளருடன் இலங்கை வைத்திருந்த இருபுடைக்கணக்குகளிலுள்ள படுகடன்களேக் குறைக்கவும் இலங்கைக்கு இது துணேசெய்தது. இவ்வகையினுல் குறைக்கப்பட்ட பொறுப்புக்கள் ரூ. 731 இலட்சமாக விளங்கின.

## அரசின் இறைத் தொழிற்பாடுகள்

1976ஆம் ஆண்டுக்கான இறைத் தொழிற்பாடுகள் பொருளாதார நடவடிக்கையில் அரசின் விரிவுபடுத்தப்பட்ட பங்கினே மிகத் தெளிவாகக் குறிக்கின்றன. அரசின் தேறிய செலவு, மொத்தத் தேசிய உற்பத்தியில் 35.9 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் ஒப்பிடுகையில் 1975இல் 32.8 சதவீதமாகவும், முன்னேய 10 ஆண்டுகளில் சராசரியாக 31.6 சதவீதமாயுமிருந்தது, இவ்வதிகரிப்புக்கு முக்கியமாக அரசினுல் மேற்கொள்ளப்பட்ட மூலதனச்செலவின் உயர்ந்த மட்டமே காரணமாகும். மீண்டெழும் செலவில் மொத்தத் தேசிய உற்பத்தியின் பங்கு ஏறக்குறைய 24 சதவீதமாக நிலேயாயிருந்தது.

அரசிறையைப் பொறுத்தளவில் சில ஆண்டுகள் தவிர, அரசிறை/மொத்தத் தேசிய உற்பத்தி விகிதம் மீண்டெழும் செலவு/மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதத்திலும் குறைவாக இருக்கும் தன்மையைக் கொண்டிருந்தது. உண்மையில், 1973ஆம் இறையாண்டில் 26.6 கொண்ட உச்சத்தை அடைந்த அரசிறை/மொ. தே. உ. விகிதம், 1976இல் 23.8 ஆக வீழ்ச்சியடைந்தது.

1976இல் இறைச்செயலாற்றம் ரூ. 1,280 இலட்சம்கொண்ட நடைமுறைக் கணக்குக் குறையொன்றை வெளிப்படுத்துகின்றது. ஒப்பிடுகையில் 1975இல் ரூ. 1,420 இலட்சம்கொண்ட குறை ஒன்று காணப்பட்டது. அரசின் மீண்டெழும் செலவை நிதியீட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட மூலவளக் கடன்பாடுகளின் அளவை நடைமுறைக்கணக்குக் குறை எடுத்துக்காட்டுகின்றது.